தமிழாக்கம்

**பள்ளிகள் மீண்டும் திறப்பதற்கான உடல்நலம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த வரைவு நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்**

**முன்னுரை:**

அரசாணை (நிலை) எண் 344 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (DM II) துறை நாள் 10.07.2020– ன் மூலம் பாடநூல்கள் மற்றும் பிற கல்வி சார் பொருட்களை வழங்குவதற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு ஏற்கனவே வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பள்ளிகளிலும் புதிய மாணவர் சேர்க்கை சார்ந்து அரசாணை (நிலை) எண் 273 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (DM 4) துறை நாள் 13.08.2020யில் வெளியிடப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை மாநிலத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் முறையாக பின்பற்ற வகைசெய்யப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டு மண்டலங்களில் வசிக்கும் மாணவர்கள் / ஆசிரியர்கள் / ஊழியர்கள் பள்ளிக்கு வருகை புரிய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும், கட்டுப்பாட்டு மண்டலங்களுக்கு வெளியே உள்ள பள்ளிகள் மட்டுமே திறக்க அனுமதிக்கப்படும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு பள்ளிகளை மீண்டும் திறப்பதற்காக பின்பற்றப்பட வேண்டிய சுகாதார மற்றும் பாதுகாப்பு குறித்த நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை இந்திய அரசு 5.10.2020 அன்று வெளியிட்டுள்ளது. இந்த நிலையான வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் கோவிட் –19 தொடர்பாக அரசு தற்போது பின்வரும் நிலையான வழிகாட்டு நெறி முறைகளை (SOP) வெளியிடுகிறது.

முதல் கட்டமாக 10 மற்றும் 12 வகுப்புகளுக்கு –––––– தேதியில் பள்ளிகள் திறக்கப்படும் (அரசால் எடுக்கப்படும் முடிவுக்கு உட்பட்டு) பாடங்களை முடிக்க ஏதுவாக பள்ளிகள் வாரத்தில் ஆறு நாட்கள் செயல்படும்.

ஒரு வகுப்பில் 25 க்கும் மேற்பட்ட மாணவர்கள் இருப்பின், ஒரு தொகுதிக்கு (Batch) 25 மாணவர்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில்

பிரிக்கப்பட வேண்டும். ஆனால், சமூக இடைவெளியைப் பின்பற்றி கூடுதலான மாணவர்கள் அமர்ந்து பயில வகுப்பறையில் கூடுதல் இடம் இருந்தால், கூடுதல் இருக்கைகளை அமைப்பதன் மூலம் அதிக மாணவர்களுக்கு இடமளிக்கலாம்.

இதுபோன்ற நிலையில், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொகுதிகள் சமூக இடைவெளியை பின்பற்றும் வகையில், ஒரே நேரத்தில் வெவ்வேறு வகுப்பு அறைகளில் கற்றுக் கொடுக்கப்படலாம். அதற்கேற்ற வகையில் ஆசிரியர்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

**I. பொதுவானவை:**

1. இணையவழி / தொலைதூர கற்றல் முறை ஒரு மாற்று கற்பித்தல் முறையாக தொடரும்.
2. பள்ளிகள் இணையவழியில் வகுப்புகளை நடத்தும்போது, சில மாணவர்கள் நேரடியாக பள்ளிக்கு வருவதை விட இணையவழி வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்பினால், அவர்கள் அவ்வாறு கலந்து கொள்ள அனுமதிக்கப்படலாம்.
3. **தனியார் பள்ளி நிர்வாகங்கள் எழுத்துப்பூர்வ இசைவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அளித்த பின்னரே தங்கள் பள்ளிகளை மீள திறக்கலாம்.**
4. பெற்றோரின் எழுத்துப்பூர்வ இசைவுக் கடிதத்துடன் மட்டுமே மாணவர்கள் பள்ளிக்கு வர அனுமதிக்கப்படுவர்.
5. பெற்றோரின் சம்மதத்துடன் வீட்டிலிருந்து படிக்க விரும்பும் மாணவர்கள் அவ்வாறே அனுமதிக்கப்படலாம்.
6. மாணவர்களின் வருகையை கட்டாயப்படுத்தக்கூடாது, அது முழுவதும் பெற்றோரின் சம்மதத்தை சார்ந்து இருக்க வேண்டும்.
7. அத்தகைய மாணவர்களின் கற்றல் விளைவுகளின் முன்னேற்றத்திற்கு தக்க முறையில் திட்டமிடப்பட வேண்டும்.
8. **அனைத்து மாணவர்களும், ஆசிரியர்களும் / பணியாளர்களும் பள்ளி வளாகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் முகக்கவசங்களை கட்டாயம் அணிய வேண்டும்.**

9. அனைத்து மாணவர்களுக்கும் வைட்டமின் மற்றும் துத்தநாக (Zinc) மாத்திரைகள் சுகாதாரத் துறையால் வழங்கப்படும்.
10. பள்ளிகள் மீண்டும் திறக்க அனுமதிக்கப்படும்போது, அரசால் வெளியிடப்படும் இந்த நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை (SOP) கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.

**II. பள்ளிகள் திறக்கப்படுவதற்கு முன்பாக உடல்நலம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த நெறிமுறைகள் :**

**அ. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் கிருமிநீக்கம் செய்தல் :**

1. பள்ளிகளை திறப்பதற்கு முன்பு, 1% சோடியம் ஹைப்போகுளோரைட் கரைசல் தெளித்து ஏற்கனவே அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி பள்ளிவளாகம் மற்றும் தளவாட பொருட்கள், கைப்பிடிகள், கதவுகள், ஜன்னல்கள் போன்றவற்றை சுத்தம் செய்து கிருமி நீக்கம் செய்யவேண்டும்.
2. கைகளை சுத்தம் செய்வதற்கு மிகச்சரியான முறையில் சோப்பினை கொண்டு குழாய்களில் ஓடும் நீரில் நன்கு கழுவுதல் வேண்டும் என்பதால் கை கழுவும் வசதிகள் போதுமான அளவில் செய்யப்பட வேண்டும். இத்துடன் **அனைத்து அரசு பள்ளிகளிலும் உள்ள, அனைத்து வகுப்பறைகளிலும் சுகாதாரத் துறையால் வழங்கப்படும் கைகளை சுத்தம் செய்யும் கிருமிநாசினி (Hand Sanitizer) பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டிருக்க வேண்டும்.**
3. பள்ளிகளின் நுழைவுவாயில் மற்றும் வெளியேறும் இடங்களில் அல்லது தேவைப்படும் இடங்களில், ஆல்கஹால் கலந்த கிருமிநாசினி / சோப்புகள் வைக்கப்பட்டு கை கழுவும் வசதிகள் செய்யப்படவேண்டும்.
4. உடல்வெப்ப பரிசோதனைக் கருவிகள் (Thermal Scanner), கிருமிநாசினிகள், சோப்புகள், பல்ஸ் ஆக்ஸிமீட்டர்கள் (Pulse Oximeter) போன்ற பொருட்கள் இருப்பதை உறுதி செய்யப்பட வேண்டும்.

5. பொது இடங்கள் சுத்தம் செய்வது தொடர்பாக முதன்மைக் கல்வி அலுவலர்கள் அரசின் வழிகாட்டுதல்களை சுற்றறிக்கை வாயிலாக அனைத்து பள்ளிகளுக்கும் உள்ளாட்சி அமைப்புகள் / சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தி அவர்களை தொடர்பு கொண்டு தூய்மையாக வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
6. கழிப்பறைகள் முறையாக சுத்தம் செய்யப்பட்டு நேர்த்தியாக பராமரிக்கப்படுதல் வேண்டும். மக்கள் வரக்கூடிய இடங்களில் கை கழுவும் பகுதிகள், கழிப்பறைகள் போன்றவை முறையாக கிருமி நீக்கம் செய்யப்பட்டு சுத்தமாக வைக்கப்பட வேண்டும்.
7. பெருந் தொற்றின் காரணமாக ஆசிரியர்கள் / பணியாளர்களுக்கான தொட்டுணர் வருகை பதிவிற்கு (Biometric) பதிலாக, பள்ளி நிர்வாகத்தால் தற்காலிக மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
8. பள்ளிகளில் ஏதேனும் அவசர காலங்களில் ஆசிரியர்கள் / மாணவர்கள் / பணியாளர்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக மாநில அரசின் அவசர உதவி எண் மற்றும் உள்ளூர் சுகாதார அதிகாரிகள், நடமாடும் மருத்துவ குழுக்களின் தொலைபேசி எண்கள் போன்றவற்றை பார்வையில் படக்கூடிய இடங்களில் வைக்கவேண்டும்.
9. இந்த தரநிலைகளின்படி ஒவ்வொரு பள்ளி நிர்வாகமும், தங்கள் பள்ளி வளாகத்தை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் பராமரிக்க வேண்டும்

**ஆ. சமூக இடைவெளிக்கான விதிமுறைகள் :**

1. அனைத்து வேலை நாட்களிலும், பள்ளி நுழைவு வாயிலிலும் பள்ளி வளாகத்திலும் கூட்டம் கூடுவதை தவிர்க்க சமூக இடைவெளிக்கான விதிமுறைகள் முறையாக பின்பற்றப்பட வேண்டும்.

2. பள்ளியில் மாணவர்கள் வகுப்பறைக்கு வெளியே சுற்றித் திரிய அனுமதிக்கக்கூடாது.

3. மாணவர்கள்/ஆசிரியர்கள் பள்ளிக்கு வரும் பொழுதும் மற்றும் பள்ளியை விட்டு புறப்படும் நேரத்திலும், சமூக இடைவெளிக்கான விதிமுறைகளைப்

பின்பற்ற வேண்டும். நுழைவுவாயில் மற்றும் பள்ளிக்குள் வரிசையில் நிற்கும்போதும் குறைந்தபட்சம் 6 அடி சமூக இடைவெளியை பின்பற்ற / பராமரிக்க வேண்டும்.

4. கூட்ட நெரிசலுக்கு வழிவகுக்கும் இறைவணக்க கூட்டம், விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் கலாச்சார நிகழ்வுகள் தவிர்க்கப்பட வேண்டும். நீச்சல் குளங்கள் பள்ளிகளில் இருப்பினும் மூடப்பட வேண்டும்.

5.உடற்கல்வி மற்றும் விளையாட்டுகளுக்கான பாடவேளைகள் அனுமதிக்கப்படாது. நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் தேசிய மாணவர் படை (NCC, NSS) நடவடிக்கைகள் அனுமதிக்கப்படாது.

6.வெவ்வேறு வகுப்பு மாணவர்கள் பள்ளிக்கு வருகைபுரிதல் மற்றும் வெளியேறுதல் ஆகியவற்றிற்கு வெவ்வேறு நேரத்தை நிர்ணயிக்கலாம்.

7. சமூக இடைவெளியை பின்பற்றும் பொருட்டு வருவதற்கும் செல்வதற்கும் பள்ளிகளில் வெவ்வேறு பாதைகளை பயன்படுத்த வேண்டும்.

8. பள்ளிக்குள் மாணவர்கள் நுழையும் மற்றும் வெளியேறும் நேரத்தில், அனைத்து வாயில்களும் திறந்து வைக்கப்பட வேண்டும். பள்ளியில் ஒன்றுக்கு மேற்பட்ட வாயில்கள் இருப்பின் ஒவ்வொரு வாயிலையும் குறிப்பிட்ட வகுப்புகளுக்கு ஒதுக்கினால் கூட்டத்தை தவிர்க்க முடியும்.

9. வரிசையில் செல்லும்போது சமூக இடைவெளியை பின்பற்றும் வகையில் தேவையான இடங்களில் வட்டம்/கட்டம் போன்ற குறியீடுகளை தரையில் வரைந்து வைக்க வேண்டும்.

10. கட்டுப்பாட்டு மண்டலங்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் உள்ள மாணவர்கள் பணியாளர்கள் தனிமைப்படுத்தப்பட்ட காலம்/ கட்டுப்பாட்டு காலம் முடிந்த பிறகு அல்லது கட்டுப்பாட்டு மண்டலம் இல்லை என அறிவிக்கப்பட்ட பின்னரே பள்ளிக்கு வருமாறு அறிவுறுத்தப்பட வேண்டும். கட்டுப்பாட்டு மண்டலங்களில் உள்ள மாணவாகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்க

ஆசிரியர்கள் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் அல்லது இணையவழி /மாற்றுவழியில் கற்பிக்கலாம்.

**11.** வகுப்பறைகளில் இருக்கை ஏற்பாடு செய்யும்போது குறைந்தபட்சம் இருக்கைகளுக்கு இடையே **6** அடி இடைவெளி பின்பற்ற வேண்டும்.

**12.** ஆசிரியர் அறைகள், அலுவலகப் பகுதிகள் (வரவேற்புப் பகுதிகள் உட்பட) மற்றும் பிற இடங்களிலும் முறையான சமூக இடைவெளி பராமரிக்கப்பட வேண்டும்.

**13.** வானிலையைப் பொறுத்து மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் சமூக இடைவெளிக்கான நெறிமுறைகளையும் கருத்தில் கொண்டு, ஆசிரியர் – மாணவர் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளுக்காக வகுப்பறைக்கு வெளியேயுள்ள இடங்களையும் பயன்படுத்தலாம்.

**14.** வகுப்பறைகள், நூலகங்கள், கழிவறைகள், கை கழுவும் இடங்கள், குடிநீர் பகுதிகள், பள்ளி சமையலறை, அரங்குகள், பேருந்துகள் / வண்டிகள் நிறுத்துமிடம், நுழைவுவாயில் மற்றும் வெளியேறும் வழிகள் போன்ற இடங்களில் சமூக இடைவெளியை பின்பற்றுவதை நினைவுபடுத்தும் வகையில் சுவரொட்டிகள், குறியீடுகள் போன்றவை வைக்கப்படவேண்டும்.

**இ. கோவிட் –19 தொடர்பான விளைவுகள் மற்றும் அதனை எதிர்கொள்வதற்கான வழிகளை உணர்ந்து செயல்பட மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக உறுப்பினர்கள் மற்றும் விடுதி காப்பாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.**

**1.** பள்ளிகளை மீளத் திறப்பதற்கு முன்பு, ஆசிரியர்கள், பெற்றோர்கள், பணியாளர்கள் மற்றும் பள்ளி நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு இணையவழி / நேரடி முறைகள், துண்டுப்பிரசுரங்கள், கடிதங்கள், கிராமங்கள் மற்றும் நகர்ப்புறத்தில் வார்டு அலுவலகத்தில் உள்ள ஒலிபெருக்கிகள் மூலம் கோவிட் **19** நோய்த்தன்மையை அதற்கேற்ப உணர்ந்து செயல்படுவதற்கான பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்

1. கை சுகாதாரம், சுவாச சுகாதாரம் மற்றும் அடிக்கடி தொடும் மேற்பரப்புகளை கிருமி நீக்கம் செய்தல் உள்ளிட்ட தேவையான செய்யக்கூடிய மற்றும் செய்யக்கூடாதவைகளாவன.

2. சமூக இடைவெளியை கடைபிடித்தல்

3. கோவிட்–19 ஐத் தடுக்க தேவையான சுகாதாரமான நடைமுறைகள்

4. கோவிட் –19 பற்றிய தவறான கருத்துக்கள்

5. காய்ச்சலை கண்டறிதலுக்கான உடல் வெப்பநிலை பரிசோதனை

6. அறிகுறிகள் இருந்தால் பள்ளிக்கு வருவதை தவிர்த்தல் மற்றும் தேவையான மருத்தவ உதவியைப் பெறுதல்

2. கட்டுப்பாட்டு மண்டலத்திற்குள் வரும் பகுதிகளுக்கோ அல்லது கோவிட் 19 ஆல் பாதிக்கப்பட்ட நபாகளின் வீடுகளுக்கோ செல்ல வேண்டாம் என்று மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் அறிவுறுத்தப்பட வேண்டும்.

3. தனி மனித சுகாதாரம், தனி மனித ஆரோக்கியம் மற்றும் தூய்மையான சீருடையின் அவசியம் குறித்து பெற்றோர்களுக்கு உணர்த்தப்பட வேண்டும். மேலும் இந்த தகவல்கள் கடிதங்கள், மின்னஞ்சல்கள் அல்லது வேறு ஏதேனும் ஒரு சமூக ஊடகம் மூலமாகவோ முன்கூட்டியே அனுப்ப வேண்டும்.

4. குழந்தை அல்லது அவர்கள் வீட்டில் வசிக்கும் எந்தவொரு குடும்ப உறுப்பினரும் காய்ச்சல் / இருமல் / மூச்சுத் திணறல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருப்பின் அவர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பக்கூடாது என்பதை பெற்றோர்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும். இதேபோல், மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ளும் குழந்தைகள் அவர்களின் மருத்துவ பயிற்சியாளர்களால் அறிவுறுத்தப்பட்டபடி தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

5. கோவிட் தொடர்பான அறிகுறிகளைக் கொண்ட குழந்தைகளை பெற்றோர்கள் பள்ளிகளுக்கு அனுப்பக்கூடாது. ஆனால் காலதாமதமின்றி தேவையான

சோதனைகள் மற்றும் சிகிச்சையை எடுத்துக் கொள்ளுதல் மற்றும் வழக்கமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும்.

**III. பள்ளிகள் திறக்கப்பட்ட பின்னர் உடல்நலம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நெறிமுறைகள்.**

**அ. மாணவர்கள் / பணியாளர்களின் உடல்நல விவரக்குறிப்பு மற்றும் அவர்களின் உடல்நலத்தை ஆய்வு செய்தல்**

**1.** பள்ளிகளை மீண்டும் திறக்கும்போது, முதல் நடவடிக்கையாக அவர்களின் உடல்நலனை ஆய்வு செய்து, மாணவர்கள் / பணியாளர்களைப் பற்றிய சுகாதார விவரக்குறிப்பு தயாரிக்க வேண்டும். மாணவாகள், ஆசிரியர்கள் மற்றும் பிற ஊழியர்களிடமிருந்து (சுகாதார விவரக்குறிப்பு) அவர்களின் உடல்நிலை குறித்த சுய விவர படிவத்தினை சேகரிக்க வேண்டும். மருத்துவ குழுவினரைக் கொண்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நோய்கள் /உடல்நலமின்மை / இணை நோய்களுக்கான சுகாதார பரிசோதனைக்கும், உடல்நல ஆய்வுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும். ஏதேனும் மருத்துவ உதவி தேவைப்பட்டால், தேவையான சிகிச்சைக்காக அருகிலுள்ள அரசு மருத்துவமனைகளுக்கு அவர்களை பரிந்துரைக்கலாம்.

**2.** மாணவர்கள் / பணியாளர்களின் சுகாதார தன்விவரக்குறிப்பு உருவாக்கல் மற்றும் ஆய்வுசெய்தல் போன்ற பணிகளை, பள்ளி திறந்த உடன் தொடங்கப்பட்டு ஒரு வாரத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். மேலும், இணையவழி வகுப்புகள் ஏற்பாடு செய்ய மாணவர்களிடம் உள்ள இணைய சாதனங்கள் தொடர்பான தகவல்களைப் அதற்குரிய படிவத்தில் பெறலாம். இணை நோயுறு நிலைமைகளை (co-morbidity condition) கொண்ட மாணவர்கள் பள்ளிக்கு வர வேண்டாம் என்றும் மாற்று / இணையவழியின் மூலம் வகுப்புகளில் கலந்து கொள்ளவும் அறிவுறுத்தப்படலாம்.

**3.** நோய்தொற்று பரவ அதிக வாய்ப்பு உள்ள அனைத்து பணியாளர்களும், அதாவது வயதான பணியாளர்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் மற்ற நோய்க்கான சிகிச்சை மேற்கொள்பவர்கள் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை

எடுக்க அறிவுறுத்தப்படலாம். மாணவர்களுடன் நேரடி தொடர்பு தேவைப்படும் எந்தவொரு பணிக்கும் அவர்களை ஈடுபடுத்தக்கூடாது.

4. சிறப்பு கவனம் தேவைப்படும் மாற்றுத்திறனாளிக் குழந்தைகள் அனைவரும் எளிதில் நோய்த்தொற்றுக்கு பாதிக்கப்படக்கூடியவர்கள் என கருதப்படுவதால், அவர்கள் பள்ளிகளுக்கு வர அனுமதிக்கப்பட மாட்டார்கள். இந்த மாணவர்களை இணையவழி / மாற்று வழி கற்றல் முறையில் ஈடுபடுத்தலாம்.

5. பள்ளிகள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களால் கோவிட்–19 தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பின்பற்றப்படுவதை மேற்பார்வையிடும் பணிக்கு ஒவ்வொரு பள்ளியும் ஒரு பொறுப்பாளரை ஒதுக்க வேண்டும். கோவிட் தொடர்பான இடர்பாடுகள் ஏதேனும் ஏற்பட்டால் அவர்கள் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

## ஆ. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் தினசரி கிருமிநாசினி உபயோகித்தல்

1.பள்ளி வளாகத்தில் உள்ள தளவாட பொருட்கள், கைப்பிடிகள், கதவுகள், ஜன்னல்கள் போன்றவை குறிப்பாக அடிக்கடி தொடக்கூடிய பகுதிகளான கதவு கைப்பிடிகள், தாழ்ப்பாள்கள் போன்றவை 1% சோடியம் ஹைப்போகுளோரைட் கரைசலால் தினமும் கிருமி நீக்கம் செய்யப்பட வேண்டும். மாணவர்கள் மாலையில் பள்ளியை விட்டு வெளியேறிய பிறகு இது சார்ந்து அரசால் ஏற்கனவே வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்கான அரசுப் பள்ளிகளுக்கான செலவினம் உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்படும்.

2. உடல்நலம் மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக மாணவர்கள் எந்தவொரு தூய்மை செய்யும் பணிகளிலும் ஈடுபடுத்தக்கூடாது.

3. கற்பித்தல் துணைக்கருவிகள், விளையாட்டுப் பொருட்கள், ஊஞ்சல்கள், மேசைகள், நாற்காலிகள், கணினிகள், அச்சுப்பொறிகள், மடிக்கணினிகள், டேப்லெட்டுகள் போன்ற அனைத்து கற்பித்தல் கற்றல் பொருட்களும் குறிப்பாக

அடிக்கடி தொடக்கூடிய மேற்பரப்புகள் / பொருள்கள் மீது முறையாக கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யப்படவேண்டும்.

4. அனைத்து குப்பைகளையும் குப்பைத்தொட்டிகளில் மட்டுமே போட வேண்டும். பள்ளி வளாகத்தில் வேறு எங்கும் குப்பைகள் குவிக்க அனுமதிக்கக்கூடாது.

5. அனைத்து குப்பைத்தொட்டிகளையும் சுத்தம் செய்து சரியாக மூடி வைக்க வேண்டும். முறையான நெறிமுறைகளை கடைபிடித்து கழிவுகள் பாதுகாப்பாக அகற்றப்பட வேண்டும்.

6. சமூக இடைவெளிக்கான விதிமுறைகளைப் பின்பற்றி திட்டமிட்ட நெறிமுறையின்படி அனைத்து மாணவர்களுக்கும், பணியாளர்களுக்கும் முறையான காலஇடைவெளியில் கை கழுவும் வசதிகள் உறுதி செய்யப்பட வேண்டும். கை கழுவும் நேரம் குறைந்தபட்சம் 40 வினாடிகள் இருக்க வேண்டும்.

7. மாணவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சுத்தமான குடிநீர் கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும். மாணவர்கள் தண்ணீர்பாட்டில்களை கொண்டு வருவது ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

8. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சோப்பு / கிருமிநாசினி மூலம் கைகளை சுத்தம் செய்த பின்பே பள்ளி வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். பள்ளிகளின் நுழைவுவாயில் மற்றும் வெளியேறும் இடங்களிலும், தேவைப்படும் இடங்களிலும் சோப்பு மற்றும் ஆல்கஹால் கலந்த கிருமிநாசினி கொண்டு கைகளை சுத்தப்படுத்த தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுவதை உரிய பொறுப்பாளரால் கண்காணிக்கப்பட வேண்டும்.

9. பள்ளிகளை துய்மைப்படுத்தும் பணிகளை எந்தவித சுணக்கமுன்றி செயல்படுத்திடும் பொருட்டு பொது இடங்களை தூய்மைப்படுத்துதல் தொடர்பாக அரசால் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை அனைத்து பள்ளிகள் உள்ளாட்சி அமைப்புகள் / சுகாதாரத் துறை அதிகாரிகள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

**10.** மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய கழிவறைகள், கைகழுவும் இடங்கள் போன்றவை முறையாக கிருமிநாசினி தெளிக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட வேண்டும். அப்பகுதிகளில் சமூக இடைவெளி கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.

**11.** குளிர்சாதனங்கள் பயன்படுத்துவதை முடிந்தவரை தவிர்த்தல் வேண்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி குளிர் சாதனங்களின் வெப்பநிலை அமைப்பு **24–30°C** வரம்பிலும் ஒப்புமை ஈரப்பதம் **40–70%** வரம்பில் இருக்க வேண்டும். முடிந்தவரை தூய்மையான வெளிக்காற்றை சுவாசிக்கும் வகையில் இருக்க வேண்டும் மற்றும் காற்றோட்டம் போதுமானதாக இருக்க வேண்டும். **50%** க்கும் அதிகமாக தூய காற்று இருக்கும் வகையில் புதிய / சுத்திகரிக்கப்பட்ட காற்று, சுழற்சி முறையில் அனுமதிக்குமாறு காற்று சுழற்சி அமைப்புகள் அமைக்கப்பட வேண்டும்.

**12.** பள்ளி வளாகத்திற்குள்ளோ அல்லது நுழைவு வாயில் அல்லது வெளியேறும் வழி அருகிலோ உணவுப் பொருட்களை விற்க வெளிவிற்பனையாளர்களை அனுமதிக்கக்கூடாது.

**இ. பெருந்தொற்றினை தடுப்பதற்கான சமூக ஒழுங்குகள்:**

**1.** அனைத்து ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள் தூய்மையான முக கவசங்களை பயன்படுத்தப்படுவதை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் உறுதி செய்ய வேண்டும்.

**2.** பள்ளி வளாகத்திற்குள் அனைத்து பகுதிகளிலும் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்படும். முகக் கவசங்களை அடிக்கடி தொடுவது தவிர்க்கப்பட வேண்டும்.

**3.** தாங்கள் பயன்படுத்தும் முகக் கவசங்களை மற்றவர்களுடன் பரிமாறிக் கொள்ளக் கூடாது என்பதை குழந்தைகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.

**4.** முகம் அல்லது முகத்தின் எந்த பகுதியையும் தொடுவதைத் தவிர்க்க வேண்டும்.

5. தளவாடங்கள் / சாதனங்கள் / மின்தூக்கி / கைப்பிடிகள் மற்றும் பிற அமைப்புகளின் மேற்பரப்பை அடிக்கடி தொடுவது தவிர்க்கப்பட வேண்டும்.

6. கழுவும் பகுதிகளைத் தவிர்த்து மற்ற இடங்களில் எச்சில் உமிழ்வது கண்டிப்பாக தடைசெய்யப்பட வேண்டும். எச்சில் உமிழ்ந்தவுடன் ஓடும் நீரில் கழுவ வேண்டும்.

7. சுவாச ஒழுங்குமுறை அதாவது ஒருவர் இருமும் போதும்/ தும்மும் போதும் அவரின் வாய் மற்றும் மூக்கை ஒரு மெல்லிழைத்தாள் / கைக்குட்டை / முழங்கையால் மூடுவதை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும். அவ்வாறு பயன்படுத்தப்பட்ட மெல்லிழைத் தாள்களை முறையாக அப்புறப்படுத்த வேண்டும்.

8. மேற்கண்ட செயல்கள் அனைத்தும் மாணவர்களால் பின்பற்றப்படுவதை ஆசிரியர்கள் கண்காணிக்க வேண்டும்.

9. மாணவர்கள் உடல்நலனை தாமாக கண்காணித்தல் மற்றும் எந்தவொரு உடல்நலக் குறைவையும் உடனடியாக தெரிவிக்க அறிவுறுத்த வேண்டும்.

10. நோய்தொற்று அறிகுறிகளைக் கொண்ட எந்தவொரு மாணவர் / ஆசிரியர் / பணியாளர்கள் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்படுவார்கள். நோய் உறுதி செய்யப்பட்டால், அவர்கள் சிகிச்சைக்காக தனிமைப்படுத்தப்படுவார்கள். இதுபோன்ற நிகழ்வுகளில், நெருங்கிய தொடர்பில் இருந்த நபர்கள் தங்கள் உடல்நிலையை தாமாகவே கண்காணிப்பதற்காக வீட்டு தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட வேண்டும்.

**ஈ. பள்ளிகளில் உடல் வெப்பநிலையை பரிசோதித்தல்**

1. மாணவர்கள் / பணியாளர்கள் / ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரும் பள்ளிக்கு வரும்போது உடல் வெப்பநிலை பரிசோதனை செய்ய வேண்டும்.

2. மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து போதுமான அளவு உடல்வெப்பநிலை அறியும் கருவிகள், போதுமான எண்ணிக்கையிலான AAA செல்கள் மற்றும் சுத்தமான துணி ஆகியவை தயாராக வைக்கப்பட வேண்டும். இப்பணிகள் இதற்கென நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்களால் கண்காணிக்கப்படும்.

**3.** ஒவ்வொரு நாளும் உடல்வெப்பநிலை அறியும் கருவிகள்(Thermal Scanner) செயல்படுகின்றனவா என்பதை தலைமை ஆசிரியர் / முதல்வர்கள் சரிபார்க்க வேண்டும்.

**4.** பள்ளிக்குள் நுழைவதற்கு முன்பு உடல்வெப்பநிலை பரிசோதனை செய்யப்பட வேண்டும். அமைந்துள்ள உள்கட்டமைப்புக்கு உட்பட்டு, பள்ளிக்கு வருபவர்கள் சமூக இடைவெளிக்கான விதிமுறைகளைப் பின்பற்றி வரிசையில் காத்திருப்பது விரும்பத்தக்கது. மேற்கூரைகளால் மூடப்பட்ட பகுதிகள் அல்லது தாழ்வாரம் போன்ற நிழல் பகுதியில் சமூக இடைவெளியை கடைபிடிக்கும் வகையில் தரையில் சரியான வட்டம்/சதுரம் போன்ற குறியீடுகள் செய்யப்பட வேண்டும்.

**5.** தொடுதல் இல்லாத உடல் வெப்பநிலை பரிசோதனைக் கருவியை கையாளும் நபர், அதனைக் கையாளும் முன் கைகளைக் கழுவி துடைத்துக் கொள்ள வேண்டும். அந்த பணியாளர் பயன்பாட்டு வழிமுறைகளை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

**6.** உடல் வெப்பநிலை பரிசோதனைக் கருவி (Thermal Scanner) பயன்படுத்துவதற்கு முன்பு, அதைக் கையாளும் நபர் அதில் உள்ள அகச்சிவப்பு சென்சார் லென்ஸை உற்று நோக்க வேண்டும். அழுக்காக இருந்தால், அதை சுத்தம் செய்ய வேண்டும். இதனால் அந்த கருவி சரியாக வேலை செய்யும். லென்ஸை சுத்தம் செய்ய, ஈரமான துணியைக் கொண்டு மெதுவாக துடைக்க வேண்டும். மற்ற வகை வேதிப் பொருட்களை பயன்படுத்தவோ அல்லது விரல்களால் லென்ஸை தொடவோ கூடாது.

**7.** நோய் பரவுவதைத் தடுக்க, ஒருவரின் உடலை வெப்பநிலை பரிசோதிக்கும் கருவியால் (Thermal Scanner) நேரடியாக தொடுவதை தவிர்க்கவும்.

**8.** ஒவ்வொரு நாளும், பயன்பாட்டிற்குப் பிறகு, சுத்தமாக துடைத்து உலரச் செய்து அடுத்த முறை பயன்பாட்டிற்காக பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

**9.** ஒவ்வொரு நாளும் முதல் பயன்பாட்டிற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக உடல் வெப்பநிலை பரிசோதனைக் கருவியின் செயல்பாடு சரிபார்க்கப்பட வேண்டும்.

ஸ்கேனரின் செல்களில் மின்சக்தி இல்லை எனில்  அவற்றிக்கு உடனடியாக செல்கள் மாற்றப்பட வேண்டும்.  ஸ்கேனரை இயக்கும் நபர் கூடுதல் செல்களை கைவசம் வைத்திருக்க வேண்டும்.

10. பொதுவாக சராசரி உடல் வெப்பநிலை 98.6°F (37° C) ஆக இருக்கும்.  சில ஆய்வுகள் "சாதாரண" உடல் வெப்பநிலை 97° F (36.1 ° C) முதல் 99 ° F (37.2°C) வரை அளவில் இருக்கும் என்று காட்டுகின்றன. எனவே 37.2° C அல்லது  99 ° F க்கு மேல் வெப்பநிலை காணப்படும் நபர்கள் பள்ளி வளாகத்திற்குள் நுழைவதைத் தடைசெய்யப்படுவதுடன், அருகிலுள்ள சுகாதார மையம் / அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்படவேண்டும்.

11. மாணவர்கள் / பணியாளர்களுக்கு  உடல் வெப்ப பரிசோதனை செய்யும் போது, இருமல், சளி மற்றும் மூச்சுத் திணறல் போன்ற பிற அறிகுறிகளும் உள்ளனவா என்பதை ஆய்வு செய்தல் வேண்டும்.

12. மேலேயுள்ள அறிகுறிகளுடன் காணப்படும் மாணவர்கள் / பணியாளர்களின் ஆக்ஸிஜன் ($0_2$) அளவைக் கண்டறிய பள்ளிகளில் ஒரு பல்ஸ் ஆக்ஸிமீட்டர் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**உ. வகுப்பறைகள் மற்றும் பிற இடங்களில் பாதுகாப்பு விதிமுறைகள்**

1. பள்ளி வளாகத்திற்குள்ளும் வெளியேயும் கூட்ட நெரிசல்கள் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யப்பட வேண்டும்.

2. மாணவர்கள் அவர்களுக்கென குறிக்கப்பட்ட / ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமர்வதை ஆசிரியர்கள் உறுதி செய்யவதோடு  வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகங்கள், விளையாட்டு மைதானம் அல்லது பள்ளி வளாகத்தின் வேறு எந்த பகுயிலும் சமூக இடைவெளியை கடைப்பிடித்தல் மற்றும் முகக் கவசங்களை அணிவதை ஆசிரியர்கள் உறுதிபடுத்த வேண்டும்.

3. சமூக இடைவெளியை  கடைபிடித்து சிறிய குழுக்களாக ஆய்வகங்களில் செய்முறை சோதனைகள் செய்யப்பட வேண்டும்.

4. எந்தவொரு பொருளையும் (பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள், பேனா, பென்சில், அழிப்பான், உணவு, தண்ணீர் பாட்டில்கள் போன்றவை) மாணவர்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வதை ஊக்கவிக்கக்கூடாது. தவிர்க்க அறிவுறுத்த வேண்டும்.

5. வெவ்வேறு வகுப்புகளுக்கு வெவ்வேறு இடைவேளை நேரம் வழங்கப்படுதல் வேண்டும்.

6. மாணவர்களுக்கு இடையே உணவுப் பகிர்வு அனுமதிக்கப்படக்கூடாது.

7. பள்ளியில் சத்துணவு சாப்பிடாத மாணவர்கள் வீட்டிலிருந்து சமைத்த உணவைக் கொண்டு வந்து சாப்பிடுவதை ஊக்குவிக்க வேண்டும்.

8. காற்றோட்டத்திற்காக வகுப்பறைகள் மற்றும் பிற அறைகளின் ஜன்னல்கள் மற்றும் கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

9. மின்தூக்கி மற்றும் நடைபாதைகளில் செல்பவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த வேண்டும். ஒரு படி விட்டு மறுபடியில் செல்லும் வகையில் படிக்கட்டுகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கப்பட வேண்டும்.

10. கழிவறைகளில் அதிக கூட்டத்தைத் தவிர்ப்பதற்கு குறிப்பிட்ட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

11. மாணவர்கள் மதிய உணவு / சிற்றுண்டிக்கு முன்னும் பின்னும் ஒவ்வொரு முறையும், அவர்கள் கழிவறை மற்றும் வேறு எந்த வெளிப்புற நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் கைகளை கழுவ ஊக்குவிக்கப்பட வேண்டும். 70% ஆல்கஹால் கொண்ட கிருமிநாசினி ஒரு மாற்றாக பயன்படுத்தலாம்.

**ஊ. உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் / பிற ஆய்வகங்களில் பயிற்சி நடத்துதல்**

1. ஆய்வகப் பயிற்சி நடவடிக்கைகளுக்கு, சமூக இடைவெளியை முறையாக பின்பற்றி மறுவடிவமைப்பு செய்யப்பட்ட இட அளவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு அமர்வுக்கு அதிகப்பட்சம் எத்தனை மாணவர்கள் இருக்க வேண்டும் என திட்டமிடப்பட்டு அதற்கேற்றவாறு செயல்படுத்தப்படல் வேண்டும்.

2.உபகரணங்களின் ஒவ்வொரு பயன்பாட்டிற்கும் முன்னும் பின்னும், அடிக்கடி தொடக்கூடிய உபகரணங்களின் மேற்பரப்புகள் ஆகியவை கிருமி நீக்கம் செய்யப்படுதல் அவசியம்.

3. உபகரணங்கள் உபயோகிக்கும் பணி இடங்களில் பணிபுரிய ஒரு நபருக்கு 4 சதுர மீட்டர் பரப்பளவு இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

4. அனைத்து ஊழியர்களும் / மாணவர்களும் பயிற்சி உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு முன்பும் பின்பும் தங்கள் கைகளை கிருமி நாசினி கொண்டு தூய்மைப்படுத்திக் கொள்ள ஏதுவாக பணிஇடங்கள் / ஹைடெக் ஆய்வகங்கள் போன்றவற்றில் கிருமி நாசினி (Hand Sanitizers) வழங்கப்பட வேண்டும்.

**எ. ஒரு மாணவர் / ஆசிரியர் / பணியாளர்களுக்கு நோய் அறிகுறிகள் உண்டானால் (காய்ச்சல், இருமல், மூச்சு விடுவதில் சிரமம்) பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள்**

1. அனைத்து தலைமை ஆசிரியர்களும் / ஆசிரியர்களும் எந்தவொரு அவசர உதவிக்கும் சுகாதார நிலையத்தின் அவசர தொடர்பு எண்ணை தயாராக வைத்திருக்க வேண்டும்.

2. நோய்வாய்ப்பட்ட நபரை மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்ட ஒரு அறையிலோ அல்லது பகுதியிலோ வைக்க வேண்டும். நோய்த் தொற்று இருக்கலாம் என அவர்களின் பெற்றோர்கள் / பாதுகாவலர்களுக்கு தெரிவிப்பதுடன் உடனடியாக அருகிலுள்ள மருத்துவ நிலையத்திற்கு கோவிட் சோதனைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. ஒரு மருத்துவர் / சுகாதார ஊழியரால் பரிசோதிக்கப்படும் வரை நோயாளி தனிமைப்படுத்தப்பட்டு முகக்கவசம் அணிந்துகொண்டு இருக்க அறிவுறுத்தப்பட வேண்டும்.

4. பொது சுகாதார அதிகாரியாலோ அல்லது மருத்துவ பணியாளராலோ நோயின் தன்மை மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கேற்ப அவர்களுக்கான சிகிச்சை,

அவர்களின் தொடர்பினை கண்டறிதல், கிருமி நீக்கம் செய்தல் போன்ற அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட வேண்டும்.

**5.** ஒரு நபர் நோய்த்தொற்றுடன் காணப்பட்டால் பள்ளி வளாகம் முழுவதும் கிருமி நீக்கம் செய்யப்பட வேண்டும்.

**6.** பள்ளி / விடுதியில் ஒரு நபர் நோய்த்தொற்றுடன் கண்டறியப்பட்டால் அந்த மாணவர் / பணியாளர்கள் மூலம் நோய் பரவுவதற்கு வழிவகுக்கும் என்பதால் அவர்கள் தங்களுடைய வீட்டிற்கு திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள். அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பொருத்தமான மேல்நடவடிக்கைகளுக்காக மாநில / மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு கண்காணிக்கப்படுவர்.

**7.** நோய்த்தொற்று கண்டறியப்பட்ட மாணவர் அல்லது நபருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த நபர்கள் கண்காணிப்புக்காக வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு இருப்பார்கள்.

**ஏ. பிற அறிவுரைகள்**

**1.** பள்ளி வளாகத்தில் உள்ள அனைத்து பணியாளர்கள் / ஆசிரியர்கள் / மாணவர்கள் கட்டாயமாக தங்கள் அடையாள அட்டையை எல்லா நேரங்களிலும் அணிந்திருத்தல் வேண்டும்.

**2.** பள்ளி வளாகத்திற்குள் எந்தவொரு கூட்டத்தையும் கூட்டக்கூடாது என்று பணியாளர்கள் / ஆசிரியர்கள் / மாணவர்கள் கண்டிப்பாக அறிவுறுத்தப்பட வேண்டும்.

**3.** நோய்த்தொற்று பரவ அதிக வாய்ப்புள்ள அனைத்து பணியாளர்களும், அதாவது வயதான பணியாளர்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் நோய்கான சிகிச்சை மேற்கொள்பவர்கள் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தப்பட வேண்டும். மாணவர்களுடன் நேரடி தொடர்பு தேவைப்படும் எந்தவொரு பணிக்கும் அவர்களை ஈடுபடுத்தக்கூடாது

4. அனைத்து பணியாளர்களுக்கும் / மாணவாகளுக்கும் கோவிட் தடுப்பு நடைமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

5. பள்ளியில் வழிகாட்டு நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கு தலைமை ஆசிரியர் / முதல்வர் பொறுப்பேற்பதோடு பணியாளர்கள் / மாணவர்கள் முறையாக கடைபிடிக்கிறார்களா என்பதை உறுதிசெய்ய அடிக்கடி கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும்.

6. போதுமான அளவு மூடப்பட்ட குப்பைத் தொட்டிகள் மற்றும் குப்பைத் போடும் பைகள் இருப்பது உறுதி செய்யப்படுவதுடன், பயன்படுத்தப்பட்ட தனிப்பட்ட நபர்களின் பாதுகாப்புப் பொருட்கள் மற்றும் பொதுக் கழிவுகளை அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி முறையாக அகற்றுவதற்கான ஏற்பாடுகள் உறுதி செய்யப்பட வேண்டும். கழிவு மேலாண்மை மற்றும் அகற்றுவதற்கான விதிமுறைகள் குறித்து பராமரிப்பு பணியில் ஈடுபடும் ஊழியர்களுக்கு தகவல் மற்றும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

7.பள்ளிகளுக்குள் தேவையற்ற பார்வையாளர்களின் நுழைவு கண்டிப்பாக தடைசெய்யப்பட வேண்டும்.

8.மாணவர்களுக்கான போக்குவரத்து வசதி பள்ளியால் செய்யப்படும் நேர்வுகளில் முறையான சமூக இடைவெளி கடைபிடிக்கப்பட வேண்டும். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (DM II) துறையால் 06.06.2020 அன்று வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.279–ல், தனியார் பள்ளி பேருந்துகள் மற்றும் வேன்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி (SOP) 1% சோடியம் ஹைபோகுளோரைடு கொண்டு வாகனங்களை தூய்மைப்படுத்தப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

9. ஏமாற்றம் மற்றும் மனச்சோர்வு போன்ற மனநலஇடர்பாடுகள் உள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தேவையான ஆலோசனை வழங்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

10. ஆசிரியர்கள், பள்ளி ஆலோசகர்கள் மற்றும் பள்ளி தூய்மைப் பணியாளர்கள் ஒன்றிணைந்து மாணவர்களின் உணர்வு நிலைத்தன்மை மற்றும் பாதுகாப்பினை (Emotional Safety )உறுதி செய்ய வேண்டும்.

11. பள்ளிகளில் அவசர சிகிச்சை குழு அனைத்து ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கான ஆதரவு குழு, உணவுப் பொருட்கள் அளிக்கும் குழு, சுகாதார ஆய்வுக் குழு போன்ற பணிக்குழுக்கள் குறிப்பிட்ட பணிகளை செய்யும் வகையில் உருவாக்கப்படலாம்.

12. இந்த பணிக்குழுக்களின் உறுப்பினர்களாக இருப்பதற்கான ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பிற பணியாளர்கள் கண்டறியப்பட்டு திட்டமிட்ட நடவடிக்கைகளை எடுக்க பயன்படுத்தலாம்.

13. மாணவர்களின் உடல் மற்றும் மன நலனை கவனித்துக்கொள்வதற்கு பள்ளியில் அல்லது தொடர்பு கொள்ளக்கூடிய தூரத்தில் முழுநேர பயிற்சி பெற்ற மருத்துவ உதவியாளர் / செவிலியர் / மருத்துவர் மற்றும் ஆலோசகர்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

14. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழக்கமான உடல்நல ஆய்வுகள் (Regular Health Checkups) பள்ளிகளால் ஏற்பாடு செய்யப்படலாம்.

15. பள்ளிகள் திறப்பதற்கு முன்னர் மாணவர்கள் / பணியாளர்களின் உடல்நல பரிசோதனைக்காகவும் மற்றும் பள்ளிகள் திறந்த பின்னர் தொடர்ந்து உடல்பரிசோதனைகள் செய்யவும் சுகாரத்துறை ஏற்பாடு செய்ய வேண்டும்.

16. பள்ளிகளின் தேவைக்கு ஏற்ப விரைவாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு ஒன்றிய அளவில் நடமாடும் மருத்துவ குழுக்களை சுகாதாரத் துறை ஏற்படுத்த வேண்டும்

17. நடமாடும் மருத்துவ குழுக்களின் தொடர்பு எண்கள் பள்ளிகளில் தெரியும் வண்ணம் எழுதி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

18. துண்டுப்பிரசுரங்களை வழங்குவதன் மூலம் கோவிட் 19 தொற்றுநோய் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் குறித்து

பள்ளி மாணவர்கள் / பணியாளர்களிடையே விழிப்புணர்வை சுகாதாரத்துறை ஏற்படுத்த வேண்டும்.

19. மாணவர்கள் மிதிவண்டி மூலம் பள்ளிகளுக்கு வருவதற்கும் அல்லது மாணவர்களை பள்ளிகளில் விடுவதற்கும் அழைத்துச் செல்வதற்கும் பெற்றோர்கள் வருவதும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

## IV. அனைத்து தனியார் பள்ளி விடுதிகளுக்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்:

1.விடுதியில் தங்கும் மாணவர்களிடையே தற்காலிக தடுப்புகள் அமைக்கப்படலாம்.

2. விடுதிகளில் சமூக இடைவெளியை எல்லா நேரங்களிலும் கடைப்பிடிக்க வேண்டும். முக்கிய இடங்களில் குறியீடுகள் எழுதி வைப்பது போன்றவை கண்டிப்பாக இருக்க வேண்டும்.

3.தேவை ஏற்படின் சமூக இடைவெளியை கடைபிடிக்கும் வகையில் மாணவர்களுக்கு மாற்று இடம் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

4.தங்கும் ஒவ்வொரு நபரையும் அவர்கள் விடுதியில் தங்க அனுமதிப்படுவதற்கு தொடங்குவதற்கு முன் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். நோய் தொற்று அறிகுறி இல்லாத நபர்களை மட்டுமே விடுதியில் தங்க அனுமதிக்க வேண்டும்.

5. பேருந்துகள், ரயில்கள் போன்ற பொதுப் போக்குவரத்துகளைப் பயன்படுத்தி மாணவர்கள் வெவ்வேறு இடங்களிலிருந்து விடுதிக்கு வருவதால், அவர்கள் விடுதிக்கு வந்தவுடன் மற்றவர்களுடனான தொடர்புகளை குறைத்துக் கொள்ள வேண்டும். அவர்களின் உடல் நிலையை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

6.மாணவர்களின் மன அல்லது உணர்வுகளை சார்ந்த பிரச்சினைகளை கவனித்துக்கொள்வதற்கு ஆலோசகர் / ஆசிரியர் முறையாக வருவதை உறுதி செய்யப்பட வேண்டும்.

**7.** உடல்நலன் பரிசோதனை செய்யப்பட்ட அத்தியாவசிய ஊழியர்களைத் தவிர மற்ற ஊழியர்கள் எவரும் விடுதியில் இருத்தல் கூடாது.

**8.** சமையலறை மற்றும் உணவு உண்ணும் இடங்களை தூய்மையாக பராமரிப்பதை உறுதி செய்ய உரிய அதிகாரிகள் வாரத்திற்கு ஒரு முறையாவது ஆய்வு செய்யவேண்டும்.

**9.** ஊழியர்கள் சமூக இடைவெளிக்கான விதிமுறைகள், சுகாதாரம் மற்றும் உடல்நலம், சுத்தமான மற்றும் சத்தான உணவு போன்றவற்றை விடுதியில் தங்கியுள்ளவர்களுக்கு ஏற்பாடு செய்யக்கூடிய திறனை வளர்ப்பதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

**10.** மேற்கூறியவற்றுடன் தனியார் நிர்வாகங்களால் பராமரிக்கப்படும் விடுதிகளை பராமரிப்பதற்கான அரசாணை (நிலை) எண்.**279**, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (DMII) துறையின் **06.06.2020** தேதியிட்ட அரசாணை மூலம் வழங்கிய (SOP) நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்து விடுதிகளிலும் பின்பற்றப்பட வேண்டும். பல்வேறு துறைகளால் நடத்தப்படும் விடுதிகளும் அந்தந்த துறைகள் வழங்கிய வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்.